Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.529/2019

**Depositions of PW- 1**

| Name | திரு.துர்க்கைசாமி | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | சுடலைகண்ணு | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of April 2026.

27.04.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**சாட்சி வீடியோ காணொளி மூலம் ஆஜரானார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் எருமைப்பட்டி கிராமம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவில்லிபுத்தூர் நகர் போக்குவரத்து பிரிவு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 14.03.2017 அன்று 17.45 மணிக்கு திருவில்லிபுத்தூர் ராஜபாளையம் டு மதுரை மெயின்ரோட்டில் சர்ச் பாய்ண்ட்டில் நானும் என்னுடன் முநிகா.1131 துடியாண்டி, தகா.ராமசாமி ஆகியோர் போக்குவரத்து சரிசெய்யும் பணியில் ஈடுபட்டிருந்தோம். அப்போது ராஜபாளையத்திலிருந்து மதுரை நோக்கி வந்த TN 30 BB 6429 என்ற பதிவெண் கொண்ட இயான் காரை நிறுத்தி தனிக்கை செய்தபோது அதனுள் இருந்த காரை ஓட்டிவந்த திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் கோதையம் ஏவிதோட்டத்தை சேர்ந்த தங்கராசு என்பவர் மகன் சதீஷ்குமார் மற்றும் அவருடன் அதே ஊரை சேர்ந்த பழனிச்சாமி மகன் ஆறுமுகம் ஆகியோர்கள் இருந்தனர். அவர்கள் இருவரும் மதுபோதையில் இருந்ததுபோல் தெரிந்தது. அவர்கள் இருவரையும் வண்டியை ஓரமாக நிறுத்தி அவர்களை காரை விட்டு வெளியே வரசொன்னபோது அவர்கள் எங்களை ஏலே நீ என்னடா பெரிய இவனா நீ வண்டிய நிப்பாட்ட சொன்னா நான் நிப்பாட்டனுமா

தேவிடியா மகனே என்று தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். பின்னர் எதிரி சதீஷ்குமார் என்னை சட்டையை பிடித்து இழுத்தார். அவருடன் இருந்த எதிரி ஆறுமுகம் நடுவிரலை பிடித்து முருக்கிவிட்டார். உடனே பொதுமக்கள் கூடிவிட்டனர். மேலும் என்னை பார்த்து கூலிப்படையை வைத்து உன்னை தீர்த்துக்கட்டிவிடுவேன் என்று மிரட்டினார்கள். நான் அவர்களை நகர் காவல்நிலையம் அழைத்து வந்து சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்குமாறு புகார்மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னை மருத்துவ நமுணா கொடுத்து சிக்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். இது சம்மந்தமாக நகர் காவல்நிலைய காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் மேற்படி தேதியில் பணியில் இருந்ததற்காக என்னென்ன பதிவேடுகள் பராமரித்து வந்தோம் என்றால் காவல்நிலையத்தில் பொதுநாட்குறிப்பேட்டில் பதிவிடுவோம். போலீஸ் நோட்டீஸ் எனது கையில் வைத்திருந்தேன். அதை தவிர நான் பணியிலிருந்தது சம்மந்தமாக Daily Duty Roaster ல் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். அதுதவிர என்னிடம் தனிப்பட்ட முறையில் பாக்கெட் டைரியும் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். பாக்கெட் டைரியில் எந்த நேரத்தில் எந்த இடத்தில் எனக்கு பணி ஒதுக்கப்பட்டது என்பது பற்றி குறிப்பிடப்படவேண்டும் என்றால் சரிதான்.

மேற்படி தேதியில் நான் பணியில் இருந்ததற்கான எனது பாக்கெட் டைரியை காவல் ஆய்வாளர் வசம் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்படி நேரத்தில் பணியில் இல்லை என்றாலும் எனது பாக்கெட் டைரியை காவல்ஆய்வாளர் வசம் ஒப்படைக்கவில்லை என்றாலும் நான் இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி சர்ச் ஜங்சன் என்பது ஆட்கள் நடமாட்டம் மற்றும் போக்குவரத்து அதிகமான பகுதி என்றால் சரிதான். அங்கிருந்து 100 அடி தூரத்தில் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் போக்குவரத்து சம்மந்தமாக பணியில் இருந்தவர் பெயர் ராமசாமி என்றால் அவரும் பணியில் இருந்தார் நானும் மேற்படி துடியாண்டி என்பவரும் பணியில் இருந்தோம். நான் வாகனத்தை நிறுத்தியவுடன் மேற்படி எதிரிகள் அவர்கள் ஓட்டிவந்த வாகனத்தை நிறுத்திவிட்டார்கள் என்றால் சரிதான்.

அதன் பின்னர் நானும் என்னுடன் இருந்த காவலர்களும் எதிரிகளை தவறாக பேசியதால் அவர்கள் அருகிலிருந்த காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றார்கள் என்றால் சரியல்ல. அப்போது நானும் என்னுடன் இருந்த காவலர்களும் எங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து எதிரிகளுடன் வாக்குவாதம் செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள் என்மீதும் என்னுடன் இருந்த காவலர்கள் மீதும் உயர் அதிகாரிகளிடம் புகார் அளித்துவிடுவார்கள் என்று பயந்து எதிரிகள் மீது பொய்யாக மேற்படி புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி 1ம் எதிரி எனது சட்டையை பிடித்து இழுத்ததாகவும் 2ம் எதிரி எனது நடுவிரலை முருக்கியதாகவும் இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி எதிரிகள் என்னை ஆபாச வார்த்தைகளால் திட்டியதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எனது போலீசார் விசாரணையிலும் எனது முதல் விசாரணையிலும் முரண்பட்ட சாட்சியங்களை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி முதல்விசாரணையில் நான் கூறிய காயங்கள் எனக்கு நானே ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரியல்ல. மேற்படி புகாரானது இவ்வழக்கிற்காக பின்னிட்டு ஆலோசித்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.529/2019

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.துடியாண்டி | Occupation | தலைமை காவலர் |
| Father's name | பரமசிவம் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of April 2026.

27.04.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் முதல்நிலை காவலராக திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையம் போக்குவரத்து பிரிவில் பணிபுரிந்தபோது கடந்த 14.03.2017 அன்று 17.45 மணியளவில் நானும் சார்பு ஆய்வாளர் துர்க்கைசாமி, திருவில்லிபுத்தூர் சர்ச் சந்திப்பில் வாகன தனிக்கை செய்துகொண்டிருந்தபோது ராஜபாளையத்திலிருந்து மதுரை நோக்கி TN 30 BB 6429 என்ற பதிவெண் கொண்ட கார் வந்தது. நாங்கள் அந்த காரை வாகன தனிக்கைக்காக நிறுத்தியபோது அதிலிருந்த நபர்கள் குடித்திருநதது தெரியவந்தது. நாங்கள் அவர்களை காரை விட்டு இறங்கசொன்னபோது இறங்கமுடியாது என்றார்கள். நாங்கள் அவர்களை விசாரித்தபோது அவர்கள் பெயர் சதீஷ்குமார், ஆறுமுகம் என்றும் அவர்கள் திண்டுக்கல்லை சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்தது. சார்பு ஆய்வாளர் அவர்களை இறங்கசொன்னபோது அவருடன் வாக்குவாதம் செய்தனர். அப்போது பக்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த தகா.188 ராமசாமி உடனே அங்கு வந்தார். எதிரிகள் சார்பு ஆய்வாளரை ஏலே சுன்னி மகனே என்று அசிங்கமாக திட்டினார்கள். பின்னர் சதீஷ்குமார் சார்பு ஆய்வாளரின் சட்டையை பிடித்து இழுத்தார். ஆறுமுகம் சார்பு ஆய்வாளரின் கையை பிடித்து வேகமாக

இழுத்ததில் சார்பு ஆய்வாளருககு இடது கை பெருவிரலில் காயம் ஏற்பட்டது. சார்பு ஆய்வாளரை கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். எதிரிகளை காவல்நிலையம் அழைத்தபோது அவர்கள் மீது சார்பு ஆய்வாளர் புகார் கொடுத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

தினந்தோறும் எங்களுக்கு பணி ஒதுக்கும்போது அதுபற்றி காவல்நிலையத்திலுள்ள பொதுநாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். அது தவிர Daily Duty Roaster லும் அதுபற்றி பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். அதுபோக எனக்கு எந்த இடத்தில் எந்த பணி ஒதுக்கப்பட்டது என்பது சம்மந்தமாக நானும் பாக்கெட் டைரி பராமரித்து வருவேன் என்றால் சரிதான். பணி நேரத்தில் எங்கு சென்றாலும் அதுபற்றி பாக்கெட் டைரியில் குறிப்பிட்டு எங்கள் மேல் அதிகாரியிடம் ஒப்படைக்கவேண்டும் என்றால் சரிதான். மேற்படி சம்பவ சமயத்தில் நான் பணியிலிருந்தது சம்மந்தமாக பாக்கெட் டைரியில் குறிப்பிட்டு எனது உயர் அதிகாரிகளிடம் ஒப்படைக்கவில்லை என்றால் அதுபற்றி தற்போது எனக்கு நியாபகமில்லை. நான் மேற்படி தேதியில் பணியில் இல்லாததாலும் மேற்படி பாக்கெட் டைரியை ஒப்படைத்தால் நான் பணியில் இல்லாதது தெரியவந்துவிடும் என்பதால் தான் பாக்கெட் டைரியை ஒப்படைக்காமல் தற்போது நியாபகமில்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சர்ச் ஜங்சன் என்பவது பொதுமக்கள் அதிகமாக நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். மேற்படி இடமானது 4 சாலைகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான். மேற்படி தேதியில் போக்குவரத்தை சரிசெய்யும் பணியானது மேற்படி இடத்தில் தகா.ராமசாமி என்பவருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். நாங்கள் மேற்படி எதிரிகள் ஓட்டிவந்த வாகனத்தை நிறுத்தியவுடன் அவர்கள் வாகனத்தை நிறுத்திவிட்டார்கள் என்றால் சரிதான். பெயர் விலாசம் கேட்டவுடன் எதிரிகளின் பெயர் விலாசங்களை சரியாக சொன்னார்கள் என்றால் சரிதான். மேற்படி தேதியில் நானும் என்னுடன் இருந்த காவலர்களும் எதிரிகளை தகாத வார்த்தைகளால் பேசினோம் என்றால் சரியல்ல. மேற்படி சர்ச் ஜங்சனிலிருந்து திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையம் 100 அடி தூரத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

நாங்கள் எதிரிகளை தகாத வார்த்தைகளால் பேசியவுடன் அவர்கள் என் மீதும் என்னுடன் இருந்தவர்கள் மீதும் அருகிலிருந்த காவல்நிலையத்தில் புகார் அளிப்பதற்காக சென்றார்கள் என்றால் சரியல்ல. அப்போது நாங்கள் எதிரிகளை தடுத்து நிறுத்தி வாக்குவாதம் செய்தோம் என்றால் சரியல்ல. ஆனால் சர்ச் ஜங்சனில் வைத்து எங்களுக்கும் எதிரிகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. மேற்படி சங்கதிகள் சம்மந்தமாக எதிரிகள் எங்கள் மேல் அதிகாரிகளிடம் புகார் கொடுத்துவிடுவார்கள் என்று பயந்து எதிரிகள் மீது அசா.1 புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் எதிரிகள் குடித்திருந்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அசா.1 ஐ சட்டையை பிடித்து இழுத்தாகவும் தாக்கியதாகவும் இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அசா.1 என்னுடன் பணிபுரியும் காவலர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.